நகராட்சிஅலுவலகம்
பொன்னேரி

கூட்டம்எண். 09 / 2025 நாள்: 19 .12.2025

# சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர்.திருமதி.கே.பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24.12.2025 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
பொன்னேரிநகராட்சி

**<u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>**

**<u>பொருள்எண் 1</u>**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் நவம்பர் 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு :-</u>** பதிவு செய்யலாம்

நகர்மன்ற தீர்மான எண் 807 நாள் 24.12.2025

தீர்மானம் : ஆணையர் அவர்களின் நவம்பர் 2025 மாத நாட்குறிப்பு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது .

**<u>பொருள்எண் 2</u>**

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் நவம்பர் 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு: -</u>**பதிவு செய்யலாம்.

நகர்மன்ற தீர்மான எண் 808 நாள் 24.12.2025

தீர்மானம் : பொறியாளரின் நவம்பர் 2025 மாத நாட்குறிப்பு மன்றம் பதிவு செய்கிறது .

**பொருள்எண் 3**

தமிழக அரசின் பொற்கால ஆட்சியில் பொன்னேரி நகராட்சியின் சாதனைகள் என மாலை தமிழகம் நாளிதழில் 5.11.2025-ல் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது, விளம்பரம் வெளியிட்ட வகையில் அதற்கான கட்டணம் ரூ.23,100/- அளிக்குமாறு மாலை தமிழகம் நாளிதழ் அலுவலகம் மூலம் பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்காணும் தொகை அந்நிறுவனத்திற்கு பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கிடலாம்.

(ந.க.எண்: 1110 /2025/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 809 நாள் 24.12.2025

தீர்மானம் : தமிழக அரசின் பொற்கால ஆட்சியின் பொன்னேரி நகராட்சியின் சாதனைகள் என மாலை தமிழகம் நாளிதழில் 5.11.2025-ல் வெளியிட்ட விளம்பரம் கட்டணம் ரூ.23,100/- பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதிக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள்எண் 4**

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2025-26-ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண் 864/2024/இ1 நாள்12.11.2025 ன்படி 27.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் , அனுமதிக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பார்த்தசாரதி கோயில் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.30 | M/s ATS Infra ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட –0.01% குறைவு |
| | | | M/s LandStar Infra Tech ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.64% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிஅளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி அளித்திடலாம்.

3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்
(ந.க.எண் 864/2024/ இ1)

நகர்மன்ற தீர்மான எண் 810 நாள் 24.12.2025

தீர்மானம் : பார்த்தசாரதி கோயில் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி மேற்கொள்ள குறைந்த ஒப்பந்தபுள்ளிகளுக்கு பணி உத்திரவு வழங்கிட நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று - பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் – மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள்எண் 5**

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2025-26-ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண் 864/2024/இ1 நாள்11.11.2025 ன்படி 28.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் , அனுமதிக்கும்.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலகத்தில் 5 KVA UPS பொருத்தும் பணி செய்தல் | 2.50 | திரு. L.G. அரசு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட –0.05% குறைவு |
| | | | M/s. Sri Thirumuruga Construction ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.62% அதிகம் |
| 2 | 5 எண்ணிக்கையிலான 5 HP திறன் கொண்ட ஆயில் என்ஜின்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தல் பணி | 0.50 | திரு. L.G. அரசு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட –0.58% குறைவு |
| | | | M/s. Sri Thirumuruga Construction ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 3.60% அதிகம் |
| 3 | வெள்ளத் தடுப்பு பணிகளுக்கு தேவையான மணல் மூட்டைகள், சவுக்கு கொம்புகள், டீசல் மற்றும் மின் மோட்டார்கள் மூலம் மழை நீரினை வெளியேற்ற தேவையான குழாய்கள் , Starter சப்ளை செய்தல் | 3.00 | திரு. L.G. அரசு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட – 0.24% குறைவு |
| | | | M/s. Sri Thirumuruga Construction ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 1.76% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்த புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி அளித்திடலாம்.

3. மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்

(ந.க.எண் 864/2024/ இ 1)

நகர்மன்ற தீர்மான எண் 811 நாள் 24.12.2025

தீர்மானம் : நாள்11.11.2025 ன்படி 28.11.2025 அன்று குறைந்த ஒப்பந்தபுள்ளிக்கு மன்றம் அனுமதிக்கிறது. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது சம்மந்தமாக மன்றம் அனுமதி அளிக்கிறது

**பொருள்எண் 6**

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2025-26-ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண். 864/2024/இ1 நாள்28.11.2025 ன்படி 15.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் , அனுமதிக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 21 அண்ணா தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 3.00 | திரு. L.G. அரசு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.08% குறைவு |
| | | | M/s. Sri Thirumuruga Construction ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.74% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிஅளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி அளித்திடலாம்.
3. மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்

(ந.க.எண் 864/2024/ இ1)

நகர்மன்ற தீர்மான எண் 812 நாள் 24.12.2025

தீர்மானம் : நாள்28.11.2025 ன்படி 15.12.2025 அன்று குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை நகர் மன்றம் , அனுமதி அளிக்கிறது.

**பொருள்எண் 7**

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2025-26-ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண் 864/2024/இ1 நாள் 29.11.2025 ன்படி 15.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் , அனுமதிக்கும்.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கள்ளுக்கடைமேடு ஈரக்கலவை கொண்டு சாலை சமன் செய்யும் பணி | 19.50 | திரு. B. பாலசுப்பிரமணி ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட –12.07% குறைவு |
| | | | திரு. S.K. பூபாலன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட –0.03% குறைவு |
| | | | திரு. R. பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 8.90% அதிகம் |
| 2 | ராஜம் நகர் மெயின் ரோடு மற்றும் 1 முதல் 4 வது தெரு ஈரக்கலவை கொண்டு சமன் செய்யும் பணி | 10.70 | திரு. B. பாலசுப்பிரமணி ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட –11.93% குறைவு |
| | | | திரு. S.K. பூபாலன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட –0.03% குறைவு |
| | | | திரு. R. பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 39.62% அதிகம் |
| 3 | ஆதித்யா கார்டன் மற்றும் லட்சுமி நகர் ஈரக்கலவை கொண்டு சாலை சமன் செய்தல் பணி | 10.50 | திரு. B. பாலசுப்பிரமணி ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட –11.94% குறைவு |
| | | | திரு. S.K. பூபாலன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| | | | திரு. R. பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 11.98% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்த புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி அளித்திடலாம்.
3. மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்

(ந.க.எண். 864/2024/ இ1)

நகர்மன்ற தீர்மான எண் 813 நாள் 24.12.2025

தீர்மானம் : 29.11.2025 - ன்படி 15.12.2025 அன்று குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது - மன்ற அனுமதிக்கு - மன்றம் அனுமதி அளிக்கிறது.

<u>பொருள்எண் 8</u>

பொன்னேரி நகராட்சி பகுதியில் அண்மையில் பெய்த கன மழையால் சேதமடைந்த கீழ்க்காணும் விவரப்படியான சாலைகளை சீரமைக்க பொதுமக்களிடமிருந்தும், வார்டு உறுப்பினர்களிடமிருந்தும் புகார்கள் வரப்பெற்றுள்ளதால் மேற்படி சாலைகளை சீரமைக்க மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் பொதுநிதியில் போதிய இருப்பு இல்லாததால் மேற்படி பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணிகளின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மொத்த தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.4 சர்ச் 3வது தெரு(183006R078) சிமெண்ட் சாலை அமைத்தல் | 67.00 | 4.00 | 5.50 |
| 2 | வார்டு எண்.6 ராமனுஜம் சாலை (183006S061) தார்ச்சாலை அமைத்தல் | 75.00 | 4.00 | 6.50 |
| 3 | வார்டு எண். 17 பாலன்நகர் 1வது தெரு (183017S130) தார்ச்சாலை அமைத்தல் | 152.00 | 3.50 | 11.50 |
| 4 | வார்டு எண். 17 பாலன்நகர் 2வது தெரு (183017S131) தார்ச்சாலை அமைத்தல் | 152.00 | 3.50 | 11.50 |
| 5 | வார்டு எண். 17 பாலன்நகர் 3வது தெரு (183017S132) தார்ச்சாலை அமைத்தல் | 80.00 | 3.50 | 6.00 |
| 6 | வார்டு எண். 27 பெருமாள் நகர் 1வது தெரு மற்றும் 2வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 147.00 | 4.00 | 12.20 |
| 7 | வார்டு எண். 27 பெருமாள் நகர் 2வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 146.00 | 4.00 | 12.20 |
| 8 | வார்டு எண். 27 சுப்பிரமணிய நகர் தார்ச்சாலை அமைத்தல் | 85.00 | 5.00 | 9.20 |
| | | 904.00 | | 74.60 |
| 9 | வார்டு எண். 23 வி.ஜ.பி சிட்டி மெயின் ரோடு தார்ச்சாலை அமைத்தல் | 716.00 | 8.40 | 84.75 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | வார்டு எண். 23 ஆதித்யா கார்டன் மெயின் ரோடு தார்ச்சாலை அமைத்தல் | 100.00 | 8.00 | 17.30 |
| 11 | வார்டு எண். 24 அன்னை அவென்யூ 1வது விரிவாக்கம் (183024S230) தார்ச்சாலை அமைத்தல் | 80.00 | 4.00 | 7.00 |
| | | 896.00 | | 109.05 |
| 12 | வார்டு எண். 24 பெருமாள் நகர் 1வது தெரு (183024S239) தார்ச்சாலை அமைத்தல் | 203.00 | 4.00 | 17.50 |
| 13 | வார்டு எண். 24 பெருமாள் நகர் 2வது தெரு (183024S240) தார்ச்சாலை அமைத்தல் | 211.00 | 4.00 | 19.00 |
| 14 | வார்டு எண். 24 பெருமாள் நகர் 4வது தெரு (183024S243) தார்ச்சாலை அமைத்தல் | 288.00 | 4.00 | 24.70 |
| 15 | வார்டு எண். 24 பெருமாள் நகர் 6வது தெரு (183024S245) தார்ச்சாலை அமைத்தல் | 248.00 | 4.00 | 22.50 |
| 16 | வார்டு எண். 25 உதயம் நகர் 1வது குறுக்கு தெரு (183025R215) சிமெண்ட் சாலை அமைத்தல் | 108.00 | 4.00 | 9.30 |
| 17 | வார்டு எண். 25 ஜெயம் நகர் (183025S251) சிமெண்ட் சாலை அமைத்தல் | 82.00 | 4.00 | 7.00 |
| | | 1140.00 | | 100.00 |
| 18 | வார்டு எண். 22 ஜி.வி.என் குறுக்கு தெரு (பூங்கா எதிரில்) தார்ச்சாலை அமைத்தல் | 90.00 | 4.00 | 7.80 |
| 19 | வார்டு 22 ஜி.வி.என் 2வது குறுக்கு தெரு (பூங்கா பின்புறம்) தார்ச்சாலை அமைத்தல் | 65.00 | 4.00 | 5.60 |
| 20 | வார்டு எண். 22 அப்துல்கலாம் நகர் தார்ச்சாலை அமைத்தல் | 65.00 | 6.00 | 8.40 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | வார்டு எண். 22 மூகாம்பிகை நகர் சாலை தார்ச்சாலை சீமைத்தல் | 123.00 | 4.00 | 10.60 |
| 22 | வார்டு எண். 23 வெள்ளோடை மெயின் ரோடு தார்ச்சாலை அமைத்தல் | 570.00 | 4.00 | 49.00 |
| 23 | வார்டு எண். 23 சாய் டவுன்ஷிப் 1வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 92.00 | 4.00 | 7.60 |
| | | 1005.00 | | 89.00 |
| 24 | வார்டு எண். 23 சாய் டவுன்ஷிப் 2வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 96.00 | 4.00 | 8.00 |
| 25 | வார்டு எண். 23 சாய் கிருபா நகர் சிமெண்ட் சாலை அமைத்தல் | 125.00 | 4.00 | 10.30 |
| 26 | வார்டு எண். 23 முத்தமிழ் நகர் மெயின் ரோடு தார்ச்சாலை அமைத்தல் | 157.00 | 4.00 | 13.50 |
| 27 | வார்டு எண். 23 நீலகண்டன் நகர் மெயின் ரோடு தார்ச்சாலை அமைத்தல் | 95.00 | 4.00 | 8.20 |
| 28 | வார்டு எண். 25 வள்ளளார் மெயின் ரோடு சிமெண்ட் சாலை அமைத்தல் | 51.00 | 3.00 | 3.20 |
| 29 | வார்டு எண். 25 வள்ளளார் 3வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 55.00 | 3.00 | 3.40 |
| 30 | வார்டு எண். 23 கே.ஆர் நகர் தார்ச்சாலை அமைத்தல் | 140.00 | 4.00 | 12.00 |
| 31 | வார்டு எண். 23 ஆதித்யா கார்டன் தார்ச்சாலை அமைத்தல் | 172.00 | 6.00 | 22.10 |
| 32 | வார்டு 23 முத்தமிழ் நகர் 1வது குறுக்கு தெரு தார்ச்சாலை அமைத்தல் | 123.00 | 4.00 | 10.60 |
| 33 | வார்டு எண். 23 முத்தமிழ் நகர் 2வது குறுக்கு தெரு தார்ச்சாலை அமைத்தல் | 48.00 | 4.00 | 4.20 |
| 34 | வார்டு எண். 23 முத்தமிழ் நகர் 3வது குறுக்கு தெரு தார்ச்சாலை அமைத்தல் | 76.00 | 4.00 | 6.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 35 | வார்டு எண். 23 முத்தமிழ் நகர் 4வது குறுக்கு தெரு தார்ச்சாலை அமைத்தல் | 68.00 | 4.00 | 5.90 |
| 36 | வார்டு எண். 23 முத்தமிழ் நகர் 5வது குறுக்கு தெரு தார்ச்சாலை அமைத்தல் | 190.00 | 4.00 | 16.30 |
| | | 1396.00 | | 124.20 |
| | **மொத்தம்** | **5341.00** | | **496.85** |

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கிடலாம்.
2) இந்நகராட்சி பொதுநிதியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் நிதி ஒதுக்கீடு செய்து தர நகராட்சி நிர்வாக இயக்குநர்அவர்களை கோரலாம்.

(ந.க.எண்: 864 /2024/இ1)\

நகர்மன்ற தீர்மான எண். 814 நாள். 24.12.2025

தீர்மானம்: அண்மையில் பெய்த கன மழையால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க பொதுநிதியில் போதிய இருப்பு இல்லாததால் இப்பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் - மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள்எண் 9**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 11 தேரடி தெருவில் புதியதாக மூன்று எண்ணிக்கை மின்கம்பம் அமைக்க வேண்டியுள்ளதால் இதற்கான கேட்பு தமிழ்நாடு மின்சார வாரியம் பொன்னேரி பிரிவு மூலம் ரூ.80,530/-க்கு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட செலவினம் நகராட்சி நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க. எண் 262 /2021/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 815 நாள் 24.12.2025

தீர்மானம் : வார்டு எண். 11 தேரடி தெருவில் மூன்று எண்ணிக்கை மின்கம்பம் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம் பொன்னேரி பிரிவு மூலம் ரூ.80,530/-க்கு – மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கிறது - செலவினம் நகராட்சி நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள்எண் 10**

பொன்னேரி நகராட்சியில் 6வது மாநில நிதிக்குழு திட்டம் 2022-2023ன் படி தேரடி தெருவில் புதிய பேரூந்து நிலையத்தில் கிழக்கு பகுதியில் புதியதாக 12 எண்ணிக்கையிலான கடைகள் கட்டப்பட்டு வருகிறது. மேற்படி கடைகளுக்கு பொறியியல் பிரிவில் வாடகை நிர்ணயம் செய்து கணக்கீட்டு தாள் பெறப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு

| வ.எண் | தளம் விவரம் | கடைகள் விவரம் | மேற்படி கணக்கீட்டு தாள்படி ஒரு கடைக்கு மாத வாடகை |
|---|---|---|---|
| 1 | தரை தளம் | 12 கடைகள் கடை ஒன்றுக்கு 130 சதுர. அடி | ரூ. 4310 + GST 18 சதவீதம் |

மேற்குறிப்பிட்ட பகுதியில் செயல்படும் தனியார் கடைகளுக்கு தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகை குறித்து வருவாய் ஆய்வர் நேரடி விசாரனை செய்து வழங்கும் சந்தை மதிப்பீடு ஆகியவற்றில் எது அதிகமோ அதை மாத வாடகையாக நிர்ணயம் செய்து 12 மாத வாடகை தொகையை வைப்புத் தொகையாகவும் 12 மாத வாடகை தொகையை கூடுதல் வைப்புத் தொகையாகவும் நிர்ணயம் செய்து குத்தகை நிபந்தனைகளின் படி ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், கடையை ஒப்படைக்கும் நாள் முதல் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியின் படி வாடகை தொகைக்கான கேட்பு கணினியில் எழுப்பி வசூல் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அரசு வழிகாட்டு மதிப்பீடு அல்லது சந்தை மதிப்பு இதில் எது அதிகமோ அதை மாத வாடகையாக நிர்ணயம் செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம் .

   (ந.க.எண்: 1023 /2025/அ1)

நகர்மன்ற தீர்மான எண் 816 நாள் 24.12.2025

தீர்மானம் : 6வது மாநில நிதிக்குழு திட்டம் 2022-2023ன் படி - புதிய பேரூந்து நிலையத்தில் - புதியதாக 12 - எண்ணிக்கையிலான கடைகளுக்கு பொறியியல் பிரிவில் வாடகை நிர்ணயம் செய்து கணக்கீட்டு தாள் பெறப்பட்டுள்ளது - வருவாய் ஆய்வர் வழங்கும் சந்தை மதிப்பீடு - எது அதிகமோ - அதை மாத வாடகையாக நிர்ணயம் செய்து - வாடகை தொகைக்கான கேட்பு கணினியில் எழுப்பி வசூல் பணி மேற்கொள்ளவும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>பொருள்எண் 11</u>**

பொன்னேரி நகராட்சியில் 6வது மாநிலநிதிக்குழு மானியம் 2023 -24 ன்கீழ் 10வது வார்டுக்குட்பட்ட தேரடி தெருவில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்தினை இடித்து புதிய பேருந்து நிலையம் கட்டும் பணியினை ரூ.145.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் கடிதந.க.எண் 11712/2025/எம்ஏ1 நாள் 01.08.2025ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு திருவள்ளூர் நகர் ஊரமைப்பு இயக்குநரகத்தில் வரைபட அனுமதி பெறுவதற்காக கட்டிட வரைபடம் தயார் செய்தமைக்கு தொகை ரூ.83,000/-வழங்கக்கோரி VPR Planners and Engineers, Tiruvallur என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க. எண் 977/2025/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 817 நாள் 24.12.2025

தீர்மானம் : புதிய பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு - வரைபட அனுமதி பெற VPR Planners and Engineers, Tiruvallur –க்கு செலவினம் ரூ83,000/- வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கிறது.

**<u>பொருள்எண் 12</u>**

இந்நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்கள், தொழில் வரி, கட்டிடஉரிமம் தொழில் உரிமம் போன்ற வரியினங்களை வசூல் செய்ய நகராட்சி கருவூலத்தில் பயன்படுத்தப்படும் பிரிண்டர் பழுதடைந்துள்ளதால் பொது மக்களுக்கு வரி மற்றும் வரியில்லா இனங்களின் இரசீதுகள் வழங்க சிரமம் ஏற்படுகிறது. எனவே வரி வசூல் பணியின் அவசியம்

கருதி புதியதாக TVS Bill Printer 250 Star – 2 எண்ணிக்கை சப்ளை செய்ய உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி செலவினம் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.32,000/- க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றம்அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்1210/2025/பஅ1)

நகர்மன்ற தீர்மான எண் 818 நாள் 24.12.2025

தீர்மானம் : வரி வசூல் பணியின் அவசியம் கருதி - TVS Bill Printer 250 Star – 2 - குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று - செலவினம் ரூ.32,000/-க்கு பணி உத்திரவு வழங்கி வருவாய் நிதியிலிருந்து - செலவினம் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

<u>பொருள்எண் 13</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந..க.எண் 1274 / 2024 / அ2 நாள் 28,10,2025 ன்படி நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்களை இணைய வழி செலுத்தும் முறைகள் தொடர்பான பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சொத்து வரி செலுத்தும் இணைய தளம், மொபைல்ஆப், UPI, QR Code / டெபிட், கிரேட்கார்ட், நெட் பேங்கிக் போன்ற வழி முறைகள் குறித்து பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் SMS, மற்றும் வாய்ஸ் மெஸேஜ் அனுப்புவதற்கு தேவையான SDE SMARTEK DUAL SIM Voice Announcement System உபகரணங்கள் மற்றும் மென் பொருள் சப்ளை செய்ய உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி செலவினம் மேற்கொள்ள தோராய செலவினம்ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண் 1210/2025/பஅ1)

நகர்மன்ற தீர்மான எண் 819 நாள் 24.12.2025

தீர்மானம் : வரி மற்றும் வரியில்லா இனங்களை இணைய வழி செலுத்தும் முறைகள் தொடர்பான குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி ரூ 1.0 L – கிற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கிறது.

**<u>பொருள்எண் 14</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1-ல் உள்ள குன்னமஞ்சேரி தர்மலிங்கம் சாலை அருகில் உள்ள கழிப்பிடம் மற்றும் வார்டு எண் 12-ல் உள்ள அரிஅரண் பஜார் பகுதியில் உள்ள கழிப்பிடம் பராமரிப்பு செய்யப்பட வேண்டியுள்ளதால் இதற்கான மதிப்பீடு தொகை ரூ4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட செலவினம் நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் 864/2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 820 நாள் 24.12.2025

தீர்மானம் : வார்டு 1 & 12 – உள்ள கழிப்பிடங்களை பராமரிப்பு செய்ய உள்ளதால் - ரூ4.0L –க்கு செலவினம் நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள்எண் 15</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1-ல் குன்னமஞ்சேரி தர்மலிங்கம் தெரு அருகில் உள்ள அங்கன்வாடி மைய எண் : 1(33602060810) – ல் சுற்று சுவர் மிகவும் குறைவாக உள்ளதாலும் கேட் இல்லாததால் இரவு நேரங்களில் சமூக விரோதிகளால் அசுத்தப்படுத்தப்படுவதால் சுற்றுசுவர் மேல் பாதுகாப்பு கம்பிவேலி அமைக்க வேண்டியுள்ளதால் இதற்கான மதிப்பீடு ரூ. 1.60 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட செலவினம் நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 864/2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 821 நாள் 24.12.2025

தீர்மானம்: வார்டு 1-ல் அங்கன்வாடிக்கு சுற்று சுவர் மேல் பாதுகாப்பு கம்பிவேலி அமைக்க ரூ. 1.60L வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது

**<u>மேசைப்பொருள் எண் : 16</u>**

பொன்னேரி நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2025-26-ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண். 1053/2025/இ1 நாள் 05.12.2025ன்படி 19.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் , அனுமதிக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 23-ல் சௌடாம்பிகை நகர் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 18.00 | M/s. Sri Thirumuruga Construction ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட -0.03% குறைவு |
| | | | திரு. L.G. அரசு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.23% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண் 1053/2025/ இ1)

நகர்மன்ற தீர்மான எண் 822 நாள் 24.12.2025

தீர்மானம் : NNT 2025-26-ன் கீழ் wd – 23-ல் சௌடாம்பிகை நகர் CC சாலை அமைத்தல் பணி - நகர்மன்ற தலைவரின் - அனுமதி பெற்று - பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கிறது .

**<u>மேசைப்பொருள் எண் : 17</u>**

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2025-2026** ன் கீழ் வார்டு எண்**19** நாடார் ரைஸ்மில் சாலையில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணியானது ரூ**10.00** இலட்சம் **29.06.2025** அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் **M/s. Land Strar Infratech** தத்தமஞ்சி, என்ற நிறுவனத்திற்கு **30.06.2025** அன்று பணி

உத்திரவு வழங்கப்பட்டது. பணிக்கான காலம் 90 நாட்கள் என பணி உத்திரவில் தெரிவித்திருந்தும், பணி துவங்கி நாளது தேதி வரை முடிக்கப்படாமல் உள்ளது. இவ்வலுவலக கடிதம் மூலம் 05.11.2025 மற்றும் 10.12.2025ல் அறிவிப்புகள் அனுப்பியும் உரிய முகாந்திரம் ஏதும் ஒப்பந்ததாரரால் சமர்பிக்கப்படவில்லை, பணி துவங்கி முடிக்கப்படாததால் பொது மக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர் மன்ற பிரதிநிதிகளிடமிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளது. காலதாமதம் ஏற்படுவதால் ஒப்பந்தத்தை ரத்து செய்து, மறு ஒப்பந்தபுள்ளி கோரவும் ஒப்பந்ததாரர் பெயரை பட்டியலில் இருந்து நீக்கம் செய்து ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்க்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. ஒப்பந்ததாரர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்து ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்க்கவும் மேல் நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண் 864/2024/ இ1)

நகர்மன்ற தீர்மான எண் 823　　　　　　　　நாள் 24.12.2025

தீர்மானம் : 2025-2026 ன் கீழ் வார்டு எண்19 நாடார் ரைஸ்மில் சாலையில் மழைநீர் கால்வாய் பணி துவங்கி முடிக்கப்படாததால் ஒப்பந்தத்தை ரத்து செய்து - மறு ஒப்பந்தபுள்ளி கோரவும் ஒப்பந்ததாரர் பெயரை பட்டியலில் இருந்து நீக்கம் செய்து ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்க்கவும் மேல் நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கிறது.

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.